**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**
**MCOP. No.436/2024**

2026–ம் வருடம் ஜனவரி திங்கள் 27–ம் நாளன்று மனுதாரர் தரப்பு சாட்சியாக ம.சா.2 வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி) திருமதி.இந்துமதி, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: பாலசண்முகம்** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது** | **:** |

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் 3 ஆம் தரப்பினர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். ம.சா.2 பாலசண்முகம் பெயரில் உள்ள ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி உத்திரவாக வேண்டுகிறேன்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் குடியிருக்கும் வீட்டிற்கும் விபத்து நடந்த இடத்திற்கும் சுமார் அரைக்கிலோமீட்டர் தொலைவு இருக்கும். விபத்து நடந்த அன்று எனது தோட்டத்திற்கு அங்கு சென்றிருந்தேன். எனது தோட்டத்திற்கும் விபத்து நடந்த இடத்திற்கும் சுமார் 50 மீட்டர் தொலைவு இருக்கும்.

நானும், மகேந்திரனும் பேசிக்கொண்டிருந்தபோது விபத்தை பார்த்தோம். விபத்து குறித்து நானோ, மகேந்திரனோ புகார் கொடுக்கவில்லை. விபத்து சமயத்தில் இறந்துபோன நபர் இருசக்கர வாகனத்தில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்தார். பேருந்து ஓட்டுநபர் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றார். சம்பவம் நடந்த இடம் இருவழிச்சாலை என்றால் சரிதான். விபத்து நடந்த சாலையின் இருபுரங்களிலும் தலா 5 அடி மண் பாதை உள்ளது. வடக்கிலிருந்து தெற்கு நோக்கி போகும்போது சாலையின் இடது புறம்தான் விபத்து நடந்தது. இருசாலைகளுக்கும் இடையில் டிவைடர் இல்லை. விபத்து குறித்து காவல்துறையின் என்னையும் மகேந்திரனையும் விசாரிக்கவில்லை. விபத்தில் இறந்துபோன நடேசன் கோவிலுக்கு மைக் செட் போடுவார் அந்த வகையில் எனக்கு தெரியும். விபத்திற்கு முழுகாரணம் நடேசன் தான் என்றும் அவர் கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் இருசக்கர வாகனத்தை இயக்கி விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நடேசன் உங்களுக்கு பழக்கமான நபர் என்பதால் விபத்தை பார்க்காமலேயே விபத்தை பார்த்ததாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.01.27 19:25:49 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.